# ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை
# கொழும்பு மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 மார்ச் 31 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 மார்ச் 29 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 டிசெம்பர் 11 ஆந் திகதியன்று மாநகர முதல்வருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) கணக்குகளில் கைவிடப்படல்**

(i) முன்னைய ஆண்டில் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்கொன்றின் பிரகாரம் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு மாநகர சபை ரூபா 13,313,438 செலுத்த வேண்டுமெனத் தீர்ப்பு வழங்கப்பட்டபோதும் முன்னைய ஆண்டிலோ அல்லது மீளாய்வாண்டிலோ அதற்கான நிதியேற்பாடு நிதிசார் கூற்றுக்களில் மேற்கொள்ளப்படவோ அல்லது அதனை வெளிக்கொணரவோ இல்லை.

(ii) ஐந்து வங்கி நடைமுறைக் கணக்குகளுக்கான வங்கிக் கட்டணம் மற்றும் நேரடி வரவு வைத்தல் என்பவற்றின் கூட்டுத் தொகையான ரூபா

2,964,013 மற்றும் செலவுகளான ரூபா 141,560 என்பன கணக்கிலிடப்படவில்லை.

(iii) நெதர்லாந்து உதவியின் கீழ் 2007 நவெம்பர் முதல் 2008 மா்ாச் வரை பெறப்பட்ட 6 வாகனங்களது பெறுமதி மூலதனமாக்கப்படவில்லை.

**(ஆ) கணக்குகளில் குறைத்தும் அதிகரித்தும் காட்டுதல்**

(i) மீளாய்வாண்டின் சொத்துக் கடன் வட்டியாகக் கணக்கிலிடப்பட்ட தொகை ரூபா 832,811 ஆகும். ஆயினும், கணக்கிலிடப்பட வேண்டிய வட்டி ரூபா 758,854 ஆகும்.

(ii) மீளாய்வாண்டிற்கெனப் பெறப்பட்ட வேலைகளுக்கான உதவி ரூபா 77,010 குறைவாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டின்போது கொள்வனவு செய்யப்பட்டுக் களஞ்சியத்தில் பெறப்பட்ட பண்டங்களது பெறுமதியான ரூபா 1,604,518 கணக்கிலிடப்படவில்லை. அதனால் கடன் கொடுத்தோர் மற்றும் கையிருப்பு மீதி என்பன குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(iv) தொடங்காத 6 வேலைகளுக்கு ரூபா 9,099,476 கடன் கொடுத்தோராக நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(v) ஐந்து கணக்கீட்டு விடயங்களது கட்டுப்பாட்டுக் கணக்கின்படியான மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 32,377,811 ஆகும் உப பதிவேடு / அறிக்கை என்பவற்றின் பிரகாரம் அக்கணக்கு மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 22,184,675 ஆகும்.

(vi) 2006 தொடக்கம் 2008 வரை ஓய்வூதிய நிதியத்திற்குக் கொடுப்பனவு செய்யவேண்டிய உதவு தொகையான ரூபா 4,051,330 கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை**

**(அ) பதில் கிடைக்கப்பெறாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

2012 ஜனவரி 23 ஆந் திகதியளவில் 3 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் சமர்ப்பிக்கப்படாதிருந்தது. அந்த ஐயவினாக்களுக்குரிய கொடுக்கல் வாங்கல்களது கணிப்பிடக் கூடிய பெறுமதி ரூபா 5,668,538 ஆகும்.

**(ஆ) தகவல்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமை**

(i) தேவையான தகவல்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையால் ரூபா 71,261,149 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

(ii) மீளாய்வாண்டின்போது பதிவழிக்கப்பட்ட ரூபா 30,723,861 கடன் கொடுத்தோர் தொகைக்கான சபையின் அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(iii) 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 206,387,906 ஆகும். கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 184,395,079 ஆகும் இவற்றிற்கான காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம் 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 57,733,176 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 50,657,244 ஆகும்.

## 2.2 வருவாய் நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

மாநகர முதல்வரால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | செலவின விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| (i) | தீர்வையும் வரியும் | 146,612 | 160,750 | 105,466 |
| (ii) | குத்தகை வாடகை | 24,872 | 21,152 | 16,219 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 4,301 | 3,139 | 6,637 |
| (iv) | பிற வருவாய் | 134,310 | 75,025 | - |

### 2.2.2 பிற வருவாய்

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 247(அ) பிரகாரம் மாநகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபையால் பதிவு செய்யப்பட்ட உணவு விடுதிகள், சிற்றுண்டிச்சாலைகள்/ தங்குமிடங்கள் என்பவற்றினது வருடாந்த வருவாயில் 1% கட்டணமாக அறவிடப்பட வேண்டுமாயினும், மாநகரசபை அவ்வருவாயைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை.

## 2.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நகர்ப்புற அபிவிருத்தி அதிகார சபைக்குரிய காணி யொன்றில் அவர்களது அறிவுறுத்துரையைப் புறக்கணித்து ரூபா 6,129,229 செலவில் அமைத்த கட்டிடம் 2012 ஜுன் மாதத்தில் நகாப்புற அபிவிருத்தி அதிகாரசபையால் இடித்து அகற்றப்பட்டிருந்தது.

(ஆ) 2012 மே 29 அன்று முதிர்ச்சியடையவிருந்த ரூபா 5,000,000 க்கான நிலையானவைப்புத் தொகை 2011 ஒக்டோபர் 25 அன்று மீளப்பெறப்பட்டு குறித்த தேவைக்குப் பயன்படுத்தப்படாது 2012 மே 17 வரை கொடுப்பனவுப் பிணை முறி ஒன்றாக வைக்கப்பட்டிருந்தது. அத்தொகையை ஏழு நாள் வைப்பில் முதலீடு செய்திருப்பின் ரூபா 173,727 வட்டி வருவாயை பெற்றிருக்கலாம் என அவதானிக்கப்பட்டது.

(இ) மாநகரசபை தலைமை அலுவலகக் கட்டிடத்திற்கு மின் உற்பத்திச் சாதனத்தின் மூலம் வழங்கப்பட்ட மின்சாரத்திற்கு 2011 ஜனவரி தொடக்கம் டிசெம்பர் வரையான காலப்பகுதியின் போது மின்சார விலைப் பட்டியல் மூலம் ரூபா 20,709 தண்டப்பணம் செலுத்தப்பட வேண்டியதாயிற்று.

## 2.4 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2011 டிசெம்பர் மாத்தில் வீதிப் பராமரிப்பு நடவடிக்கைக்காக 48.32 கியூப் முற்கலவை, 23 தார்ப்பீப்பாக்கள், 32 லீட்டர் மண்ணெண்னை, 28.52 கியூப் ABC, 3.52 கியூப் ½ சிப்ஸ் கற்கள் என்பன பயன்படுத்தப்பட்டபோதும், வேலைக்கான தேவை இருந்ததா என்பது மதிப்பிடப்படவில்லை. மூலப்பொருள் பயன்பாடு தொடர்பாகவோ அல்லது குறித்த வேலை முடிவுற்றதைக் குறிக்கும் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கையோ இருக்கவில்லை.

(ஆ) நாவல மயானத்தினது சேவை மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு தனியார் கம்பனி ஒன்றுடன் 2009 டிசெம்பர் 01 ஆந் திகதி உடன்படிக்கை ஏற்பட்டு அதன் பொருட்டு வருடாந்த சேவைக் கட்டணமாக ஒரே தடவையில் ரூபா 186,984 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. குறித்த கம்பனி சேவை வழங்குவது தொடர்பான உடன்படிக்கையை மீறியிருந்தது. அக்கம்பனிக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. உடன்படிக்கை மீறப்படுமாயின் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான பிரிவு சேவை உடன்படிக்கையில் சேர்த்துக் கொள்ளப்படாமையால் இந்நிலைமை உருவாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், இச்சேவை மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் மீளாய்வாண்டின்போது பிறிதொரு தனியார்

கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. மாநகரசபை அக்கம்பனியுடன் சேவை உடன்படிக்கையில் ஈடுபடவில்லை.

(இ) சந்திரா த சில்வா விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பாக ஒப்பந்தகாரரால் மாநகரசபைக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கின் 2010 நவெம்பர் 25 ஆந் திகதிய தீர்ப்பின்படி, மாநகர சபை ஒப்பந்தகாரருக்கு ரூபா 13,838,439 கொடுப்பனவு செய்யவேண்டியிருந்தது. அத்தீர்ப்புக்கமைய மாநகரசபை செயற்படாதலால் 2012 மார்ச் 08 ஆந் திகதியன்று கொழும்பு வணிக நீதிமன்றம் மேற்படி வழக்குத் தீர்ப்பு அமுலாகும் பொருட்டு மீண்டும் தீர்ப்பொன்றை வழங்கியிருந்தது. வழக்குத் தீர்ப்பு நடைமுறைப்படுத்தப்படாமையால் கொடுப்பனவு செய்யவேண்டியேற்பட்ட தாமதக் கட்டணத்துடன் மாநகரசபை 2012 ஒக்டோபர் 23 அன்று குறித்த ஒப்பந்தகாரருக்கு ரூபா 14,402,259 கொடுப்பனவு செய்திருந்தது.

## 2.5 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2003 ஜூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கைப் பிரகாரம் ஒன்றிணைந்த திட்டமும் ஒன்றிணைந்த செயல் நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்படவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டின்போது புத்தகங்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 6,795,611 செலவிடப்பட்டிருந்தது. பாடசாலை வகுப்புப் புத்தக நிரலிற்கு இணங்காத விதத்தில் புத்தகங்கள் பார்சல்களில் இடப்பட்டதால் ஏறக்குறைய ரூபா 689,387 க்கான புத்தகங்கள் விநியோகிக்கப்படாது எஞ்சியிருந்தன.

(இ) மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (1) (ஏ) உபபிரிவில் உள்ள ஏற்பாடுகள் தவறான வியாக்கியானத்துடன் 2005 மே 05 ஆந் திகதியன்று 4 ஆம் ஒழுங்கையில் 5.30 பர்ச்சஸ் வீதம் 5 காணித் துண்டுகள் ஒன்று ரூபா 550 வீதம் 5 கொள்வனவாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன. 2005 நவெம்பர் 29 ஆந் திகதியன்று அவர்கள் மேற்படி காணித் துண்டுகளை ஒருங்கு சேர்த்து ரூபா 5,300,000 க்கு அதனை மீண்டும் விற்பனை செய்திருந்தனர். 4.70 பர்ச்சஸ் உள்ள பிரவேச பாதைக்கான காணி

ரூபா 6 இலட்சத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டு காணியின் தற்போதைய உரிமையாளரிடம் ஒப்படைக்கப்படுவதற்கான முயற்சியில் சபை ஈடுபட்டிருந்தது.

(ஈ) மாளிகாவ வீதி 45/10 ஆம் இலக்க வத்தையில் உள்ள 08 வீடுகளை நிர்மாணிக்கும் வேலை தொடர்பாக தனியார் நிர்மாண வேலை நிறுவனம் ஒன்றிற்கு 2011 ஆம் ஆண்டில் ரூபா 1,109,709 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வீடுகள் நிர்மாணிக்கப்பட்ட காணி சபையால் சுவீகரிக்கப்படவில்லை.

(உ) கூறு விலைகளைக் கோருதல், தொழில்நுட்ப மதிப்பாய்வுக்குழு மற்றும் நிதிக் குழு அங்கீகாரம் என்பன இல்லாது உபயோகப்படுத்திய கணனித் துணைப்பாகங்கள் (11 மொனிட்டர்கள்) மீளாய்வாண்டில் ரூபா 41,500 க்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஊ) மாநகர சபையின் பிரதி மாநகர ஆணையாளர் 2007 ஆகஸ்ட் தொடக்கம் 5 ஆண்டுகள் பூராவும் மாநகர ஆணையாளர் பதவியில் பதில் கடமை ஆற்றியிருந்தார். இலங்கை குடியரசின் தாபனவிதிக் கோவையின் 2 ஆம் அத்தியாயத்தினது 13(3) ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் குறித்த பதவிக்கு நிரந்தர நியமனத்தை வழங்குவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை.

(எ) வரவு செலவுத் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான, செலவினங்களுக்கிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் நிலவின. வரவு, செலவுத் திட்டம் ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

(ஏ) இரு நடைமுறைக் கணக்குகளிலிருந்து வழங்கப்பட்டு, 6 மாதங்கள் கடந்தும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்த ரூபா 1,063,034 பெறுமதியான 10 காசோலைகள் சம்பந்தமாக இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 396 க்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஐ) ஐந்து கணக்கீட்டு விடயங்களுக்குரிய ரூபா 2,136,594 கூட்டுத்தொகைப் பெறுமதியுடைய கணக்கு மீதிகள் 6 ஆண்டுகளுக்கு மேலாகத் தீர்த்து வைக்கப்படாது முன்கொண்டு செல்லப்பட்டவாறிருந்தன. அதனைத் தீர்த்து வைப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2.6 உடல் அபிவிருத்தி நிலையம்

2012 மார்ச் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வையின்போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு.

(i) சபைக்குரிய 12 உடல் அபிவிருத்தி நிலையங்களில் 5 செயற்படும் நிலையில் இருக்கவில்லை.

(ii) சப்புமல் பிளேஸ் உடல் அபிவிருத்தி நிலையத்திற்கு 2010 மார்ச் 9 அன்று கையளிக்கப்பட்ட ரூபா 375,000 பெறுமதியான Trade mill இயந்திரம் செயற்படுத்தப்படாத நிலையில் இருந்தது.

(iii) வெலிக்கடை பிளாசா கட்டிடத்தின் முதலாம் மாடியில் 18 ஆம் இலக்க நிலையத்தில் அமைந்துள்ள உடல் அபிவிருத்தி நிலையம் ரூபா 2,539,989 செலவில் மறுசீரமைக்கப்பட்டு ஓராண்டிற்கு மேலாகியும் குறித்த தேவைகளுக்குப் பயன்படுத்தப்படாதிருந்தது.

## 2.7 தண்டப்பணம்

மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 252 ஆம் அத்தியாயத்தினது 261(1) ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய பொறுப்பானவர்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட தண்டப் பணத்தின் பிரகாரம் 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய தண்டப் பணத்தின் பெறுமதி ரூபா 25,550,166 ஆகும்.

## 2.8 சொத்து முகாமைத்துவம்

### (அ) அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்

2011 டிசெம்பர் 31 உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன், ஊழியர் முற்பண மீதி என்பவற்றினது கூட்டுத்தொகை ரூபா 87,214,721 ஆகும். இடமாற்றம் பெற்றுச் சென்ற, சேவை நீங்கியவர்களிடமிருந்து ரூபா 3,335,741 கடன் மீதி நிலுவையாக இருந்தது. இதற்கான காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படவில்லை.

**(ஆ) அசைவற்ற நடைமுறைச் சொத்துக்கள்**

2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 3 ஆண்டுகளைக் கடந்துவிட்ட அசைவற்ற காசு மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 183,598 ஆகும்.

**2.9 வாகனப் பாவனை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்குரியதும் வாகனக் குழாவில் உள்ளதுமான வாகனங்கள் உத்தியோகத்தர்களது வீடுகளில் வார இறுதி நாட்களிலிலும் விடுமுறை தினங்களிலும் தரித்துவைக்கப்பட்டிருந்ததும் அந்நாட்டிகளில் அவற்றில் கடமை புரியும் சாரதிகளுக்கு மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) வார இறுதி நாட்களிலும் விடுமுறை நாட்களிலும் உத்தியோகத்தர்கள் பயணஞ் செய்யும் வாகனங்கள் அலுவலக வளாகத்திற்குள் உத்தியோகத்தர்களுடன் வருகை தந்து, ஒரு சில நேரத்திற்குள் உத்தியோகத்தர்களுடன் மீண்டும் திரும்பிச்சென்ற சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன. அத்துடன் அத்தினங்களில் குறித்த உத்தியோகத்தர்கள் படியாக சம்பளத்தில் 1/20 பங்கைப் பெற்றுமிருந்தனர்.

(இ) வார இறுதி மற்றும் விடுமுறை தினங்களில் உத்தியோகத்தர்கள் தாமே மாநகரசபைக்கு வாகனங்களைச் செலுத்தி வந்திருந்ததுடன் குறித்த சாரதிகள் மேலதிக நேர வேலைக்கான கொடுப்பனவைப் பெற்றிருந்த 7 சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

(ஈ) பொறுப்பாக உள்ள உத்தியோகத்தர்களது மேற்பார்வையின்றி RS-1248 இலக்க லோடர் வார நாட்களிலும் வார இறுதி நாட்களிலும் சேவையில் ஈடுபட்டிருந்தது. வார இறுதி வேலைகளுக்கு முன்கூட்டியே அங்கீகாரம் பெறப்படவில்லை. இதன் பொருட்டு ரூபா 194,901 பெறுமதியான 2616 லீட்டர் டீசல் 2011 முதல் அரையாண்டில் செலவாகியிருந்தது.

## 2.10 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 134(3) க்கமைய உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருவாய் நிர்வாகம்

(இ) கையிருப்புக் கட்டுப்பாடு

(ஈ) சொத்து முகாமைத்துவம்